**குகனே வந்து விடு**
**நின் சாவு பொய்யென்றாகாதோ!**



நரம்புகளை ஓர் கணம்
அதிரச்செய்ததுன் மரணம்
இதயம் கனத்துப்போனது
இமைகள் இமைக்க மறந்தன
விழிகள் விறைத்த நின்றன
செவிகள் செந்தனல் தோய்ந்தது
இல்லை யென்றுரைக்காதவன்
இல்லை யென்றானானோ
காலனைச் சபித்து விட்டு
ஆற்றாதழுகின்றோம்
தேறுதல் செய்வதற்கு
குகனே வந்து விடு
நின் சாவு பொய்யொன்றாகாதோ!
வாழ்க்கையை மனிதன்
சிருஷ்டிக்கின்றான் என்பதை
உணர்த்திநின்ற குகனே
வாழ்க்கை என்பது
இறைவனின் தீர்மானமென்று
பாடம் கற்பித்து
பாதி வழி சென்றாயையா
பரிதவித்துப்போனோமடா
மீதி வழி செல்ல
குகனே வந்து விடு
நின் சாவு பொய்யென்றாகாதோ!
பத்தரை மாற்று தங்க மகனே
பாரினில் உனக்கென்ன குறை
உன்னால் எமக்கென்ன குறை
உத்தமனே நீ
தெட்டதெல்லாம் துலங்கியது
தொடுவானம் வரை எட்டும்
பக்குவமும் உனக்குண்டு
படிதவறாப்பயணம் செய்தாய்
பகையின்றி உறவு கொண்டாய்
பாவமென்ன செய்தோமடா
குகனே வந்து விடு
நின் சாவு பொய்யென்றாகாதோ!
உள்ளுவாதல்லாம் உயர்வு
ஊராண்மை உண்டுறங்கி
உறவுகொள் கேண்மை
உன் கள்ளமறியாத கருணையினால்
கட்டுண்டிருந்தொமையா
தன் குற்றம் நாணிப்பிறர் குற்றம்
பாராமல்
என்குற்றம் எவர்செயினும்
எல்லார்க்கும் மன்னிக்கும் நல்ல
பண்புற்ற மேலோனே
என்குற்றம் யாம் செய்தோம்
குகனே வந்து விடு
நின் சாவு பொய்யென்றாகாதோ!
பட்டுத்துகில்கிற மேனியனே
பரிதவித்துப்போனோமையா
பூதலம் தேடித்தேர்ந்த
பஞ்சமில்லாப்பண்பாளனே – உன்னை
பாடையேற்றிப்பார்ப்பதற்கு
பாவம் என்ன செய்தோமடா
நறுமண நிழல் தரும்
குடைவாகை மரமொன்று சாய்ந்ததுவோ
குகனே வந்து விடு
நின் சாவு பொய்யென்றாகாதோ!
குழந்தையுள்ளத்துடன்
குடியிருந்த குபேரன் எம்மிடையே
அன்புரசித்திரிந்த
குங்குமப்பொட்டழகன்
நீறாகிப்போவானா
பாவக்கணக்கு முடிக்கா
பாவிகள் நாம் வாழ்கின்றோம்
பாவமறியாப் பாலகனாய்
போதுமென்று வாழ்வின்
பாசக்கயிறறுத்தோகினாயோ
குகனே வந்து விடு
நின் சாவு பொய்யென்றாகாதோ!
கனிதரும் விருட்சமொன்று
ஊரின்கண் இருந்ததென்று
இறும்பூதெய்திருந்தோம்
கணக்குப்பிசகி கணப்பொழுதில்
காலனவன் கவர்ந்து செல்ல
கதிகலங்கிப்போனோமையா
குகனே வந்து விடு
நின் சாவு பொய்யென்றாகாதோ!

சீரோடு சிதைவின்றிச்சிந்தித்து
சிறந்திருந்து செல்வர்க்கழகாய்
செழுங்கிளை தாங்கிய செங்கையோனோ
பகைச்சுவையறியா பேராளனே
நறுமொழிநவின்றுலாவந்த
நந்தவனமே உனக்கு
மலர்வளையம் சாத்தி எம்மை
அஞ்சலித்து நிற்கவைத்து
வேடிக்கை பார்க்கின்றாயோ எம்
வேதனையைத்தீராயோ
குகனே வந்து விடு
நின் சாவு பொய்யென்றாகாதோ!

சிவப்பித்தன்